**நிகழும் சோபகிருது வருடம் ஆவணி மாதம் 14 ஆம் நாள் (31.08.2023)**
**வியாழக்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் நண்பகல் 12.30 மணிக்கு**
**நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்**

**பொருள் எண்.1 :**

நாமக்கல் நகராட்சி ஆணையர் அவர்களின் ஜீலை 2023ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண் : 518, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 2 :**

நாமக்கல் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை 2023ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண் : 519, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 3 :**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் பயன்பாட்டில் இருந்து வந்த கசடு கழிவுநீர் அகற்றும் வாகனம் வாங்கப்பட்டு 22 ஆண்டுகளுக்கு மேல் ஆன நிலையில் தற்போது மத்திய அரசின் மோட்டார் வாகன விதிகளின்கீழ் 15 ஆண்டுகளுக்கு மேலான வாகனங்களுக்கு சாலை வரி மற்றும் பசுமை வரி வசூலிக்க கூடாது என சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட்டதால் தகுதிசான்று புதுப்பிக்க இயலாமல் வாகனம் நிறுத்தப்பட்டுவிட்டது.

அதனால் நகராட்சிக்கு சொந்தமான பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நீதிமன்ற அலுவலகம் ஆகியவற்றில் உள்ள கழிப்பிடங்களில் சேகராமாகும் (செப்டிக் டேங்க்) கழிவுகள் சுத்தம் செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது.

எனவே நாமக்கல் நகராட்சி முழுவதும் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படும் வரையில் நகராட்சியுடம் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நீதிமன்ற அலுவலகம் ஆகியவற்றில் உள்ள கழிப்பிடங்களில் (செப்டிக் டேங்க்) கழிவுநீர் நச்சுத் தொட்டிகளை சுத்தம் செய்ய தனியார் கசடு கழிவுநீர் அகற்றும் வாகனத்தினை பயன்படுத்தி சுத்தம் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 4893 /2023 /எச்1)**

**தீர்மானம் எண் : 520, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மோகனூர் காவேரி ஆற்றிலிருந்து பம்பிங் செய்யப்பட்டு நகரில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக மோகனூர் முதல் நாமக்கல் வரை 19கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பிரதான குழாய்களில் சிறிய பழுதுகள் ஏற்பட்டாலும் குடிநீர் விநியோகம் வெகுவாக பாதிப்படைகிறது. எனவே மேற்கண்ட குடிநீர் பிரதான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணிக்கு ஒரு வருடத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.12.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மேற்கண்ட பணியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோகப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண். 4354 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 521, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5 :</u>**

நாமக்கல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN 88 5230 எண்ணுள்ள (Dog Catching Vehicle) வாகனத்திற்கு தகுதி சான்று பெற தேவையான மராமத்து பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.78,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 503, நாள்: 31.07.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 22.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. காந்தி மோட்டர்ஸ், ஈரோடு – ரூ. 77,400/–
2. மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், திருப்பூர் – ரூ. 77,800/–

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :–** மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த காந்தி மோட்டர்ஸ், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 4650/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 522, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6 :</u>**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதார பிரிவிற்கு பிளாஸ்டிக் டப்பாக்கள் (Plastic Bins) 80 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீல நிறம் மற்றும் பச்சை நிற டப்பாக்கள் 100 எண்ணிக்கை விநியோகம் செய்யும் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ. 3,00,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 505, நாள்: 31.07.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 22.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் – ரூ.1,463.20 /– (ஒரு எண்ணிக்கை)
2. மணி மோட்டார்ஸ் & டிரேடர்ஸ், மேட்டூர் – ரூ.1,498.60 /– (ஒரு எண்ணிக்கை)

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :–** மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 4713/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 523, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 7 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட நான்கு நுண் உர மையங்களில் மக்கும் குப்பைகளிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரம் பேக்கிங் செய்து 1 கிலோ ரூ.10/–க்கு விற்பனை செய்வதற்கு 2500 பைகள் (Cloth Bag (5kg) Size : 12x16, Single Colour, Double Side Printing) விநியோக பணிக்கு ரூ.1,00,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 225, நாள்: 20.04.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 09.08.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. Vasan Digital, Trichy – ரூ. 21 /– (ஒரு எண்ணிக்கை)
2. KSVC Enterprises,pudukottai – ரூ. 18 /– (ஒரு எண்ணிக்கை)

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :–**

1) மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த KSVC Enterprises, நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்னனுமதியைப்பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண்.1506/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 524, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8 :</u>**

நாமக்கல் நகராட்சியில் பணிபுரியும் பொதுசுகாதார பிரிவு தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு வருடந்தோறும் அரசு உத்தரவின்படி காலணிகள் வாங்கி வழங்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் 2023–2024ம் ஆண்டிற்கு வாங்கி வழங்கப்பட

வேண்டியுள்ளது. மேற்படி காலணிகள் மற்றும் ஷீக்கள் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/– த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. தமிழக அரசின் ஆணைப்படி வருடந்தோறும் காலணிகள் வழங்கப்படவேண்டி உள்ளதால் மேற்படி செலவினங்களை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி காலணிகளை அரசு நிறுவனமான தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத்தொழில்கள் வாரியத்தின் மூலம் வாங்கிக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4988/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 525, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9 :**

நாமக்கல் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 2023–2024ம் ஆண்டிற்கு கீழ்கண்டுள்ள விபரப்படி தளவாட சாமான்கள் கொள்முதல் செய்ய வேண்டியது அத்தியாவசிமாகிறது.

| வ. எண். | பொருளின் விபரம் | தேவைப்படும் எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1 | மண்வெட்டி + கைபிடியுடன் | 100 |
| 2 | கடப்பாரை | 25 |
| 3 | தடி கூட்டுமாறு | 500 |
| 4 | கை விளக்குமாறு | 1000 |
| 5 | குப்பை அள்ளும் தகரம் | 100 |
| 6 | அன்னக்கூடை பிளாஸ்டிக் | 250 |
| 7 | பிளாஸ்டி சட்டி | 250 |
| 8 | அரிவாள் | 100 |
| 9 | கொடுவாள் | 50 |
| 10 | சம்மட்டி + கைபிடி | 10 |
| 11 | சாக்கடை சுரண்டி பிடியுடன் | 100 |
| 12 | ஆபிஸ் கூட்டு மாறு (டைல்ஸ்) | 100 |
| 13 | ஆபிஸ் மாப்பு (டைல்ஸ்) | 100 |
| 14 | கழிப்பிட பிரஸ் (டாய்லட் பிரஸ்) | 25 |
| 15 | 4 பல் கொக்கி பிடியுடன் | 50 |
| 16 | பிளாஸ்டிக் பக்கெட் (பிளாஸ்டிக் வாளி) (15லிட்டர்) | 50 |
| 17 | மக்கு (3/4 லிட்டர்) | 50 |
| 18 | மூங்கில் கூடை | 100 |

எனவே பொது சுகாதார பணிக்கு தேவையான மேற்காணும் தளவாட சாமான்களை கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மேற்படி தளவாட சாமான்கள் கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான செலவினங்களை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 5139/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 526, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10 :**

நாமக்கல் நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள 9 ஊராட்சி பகுதிகளில் உள்ள குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்களுக்கு புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மொத்தம் 23403 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இணைப்புகள் அனைத்தும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டதால் பெரும்பாலான குடிநீர் இணைப்புகளுக்கு வைப்புத் தொகை மட்டும் செலுத்தியும், மற்ற இனங்களுக்கு எவ்வித கட்டணங்களும் வசூல் செய்யப்படாமல் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளதற்கு சாலை பராமரிப்பு கட்டணம் மற்றும் மேற்பார்வை கட்டணம் செலுத்தவும், மற்ற இனங்களுக்கு வைப்புத் தொகை, மேற்பார்வை

கட்டணம் மற்றும் சாலைபராமரிப்பு கட்டணம் ஆகியவைகளை செலுத்த பொது மக்களுக்கு விவரம் தெரிவிக்கப்பட் வேண்டி உள்ளது.

எனவே மேற்படி விவரங்களை அன்னார்களின் கைபேசிக்கு குறுஞ்செய்தியாகவும், ஆட்டோ மூலம் விளம்பரம் மற்றும் செய்திதாழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டியது அவசியமாகிறது. மேற்காணும் முறையில் விளம்பரம் செய்ய அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்: 1131/2017/இ2)**

**தீர்மானம் எண் : 427, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11 :</u>**

நாமக்கல் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் குடிநீர் வாகனம் TN 88 3807 வாகனத்தின் பேட்டரி பழுதுகளை உடனடியாக சரி செய்ய வேண்டி 27.06.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1 | V.JAY.S. Battery Works, Salem Road, Namakkal | ரூ.18500/– |
| 2 | Sri Pechi Batteries, Mudalaipatty Pudur, Namakkal | ரூ.19000/– |
| 3 | Sri Sakthi Batteries, Salem Road, Namakkal | ரூ.19500/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய V.JAY.S.BATTERY WORKS, NAMAKKAL என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** குறைந்த விலைப்புள்ளி வழங்கிய V.JAY.S.BATTERY WORKS, NAMAKKAL என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 2292/2023/இ2)**

**தீர்மானம் எண் : 528, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12 :</u>**

நாமக்கல் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் TN 88 J3969 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதால் பழுதுகளை உடனடியாக சரி செய்ய வேண்டியதின்அவசர அவசியம் கருதி, மேற்கண்ட மகேந்திரா ஈப்பு வாகன நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Sri Lakshmi Auto Mobiles World, சேலம் என்ற நிறுவனத்தின் மூலமாக நேரடியாக பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச செலவினமாக ரூ.65000/ –ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசரம் அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியைப்பெற்று மேற்கண்ட பணிக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Sri Lakshmi Auto Mobiles World, சேலம் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 4178/2023/இ2)**

**தீர்மானம் எண் : 529, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 13 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 துறையூர் சாலையிலிருந்து சபரி டைல்ஸ் வழியாக நடராஜபுரம் செல்லும் சாலை நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் 2022–2023இன்கீழ் புதுப்பிக்கப்படவுள்ளது. மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தினால் சாலையில் மழைநீர் தேங்கி பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.11.60இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 4761 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 530, அங்கீகரிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 14 :</u>

நாமக்கல் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான வார்டு எண்.2,3,4,6,8,9,19 மற்றும் 20 ஆகிய வார்டு பகுதிகளில் சாலைகள் மிகவும் பழுதடைந்து பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. மேலும் அப்பகுதியில் மழைக்காலங்களில் சாலையில் மழைநீர் தேங்கி பொதுசுகாதார கேடு ஏற்படும் சூழல் நிலவுகிறது. எனவே மேற்கண்ட பகுதிகளில் சாலை பரமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.8.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண். 4760 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 531, அங்கீகரிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 15 :</u>

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38 கொண்டிசெட்டிப்பட்டி பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் (Type II) Interactive smart board பொருத்துதல் பணி ரூ.5.70 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 01.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | M/s.GSC Technology & Services, Komarapalayam | – | ரூ. 5,69,903 /– |
| 2. | Perennial Systems, Salem | – | ரூ.5,89,849 /– |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :–</u>

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த M/s.GSC Technology & Services, Komarapalayam நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்பித்த M/s.GSC Technology & Services, Komarapalayam நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம் **(ந.க. எண். 3984/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 532, அங்கீகரிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 16 :</u>

நாமக்கல் நகராட்சியில் முதலைப்பட்டி, சேந்தமங்கலம் சாலை மற்றும் வாரசந்தையில் அமைக்கப்பட்டுள்ள நுண்உரக்கூடங்களில் திடக்கழிவுகளை உரமாக்கும் போது அதிக வெப்பம் வெளியேற்றப்படுவதால் பணியாளர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட 3நுண்உரக்கூடங்களிலும் Exhaust fan பொருத்த வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

__அலுவலக குறிப்பு:-__ மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 4984 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 533, அனுமதிக்கப்பட்டது.**

__**பொருள் எண். 17 :**__

நாமக்கல் நகராட்சி மேற்கு பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.1,2,6,7,8,9,10,17,18,19 ஆகிய 10 வார்டுகளில் அமைக்கப்பட்டுள்ள நகராட்சிக்கு சொந்தமான அடிப்பம்புகள், பொதுக்குழாய்கள் மற்றும் குடிநீர் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்யவேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணியை தனியார் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.15.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

__அலுவலக குறிப்பு:-__

1. மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்னனுமதிய பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண். 4986 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 534, அங்கீகரிக்கப்பட்டது.**

__**பொருள் எண். 18 :**__

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 ஆர்.பி.புதூர் சாவடி பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் போது பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றி அமைக்க வேண்டியதும், சாவடி சிவன் கோவில் மற்றும் ஆர்.பி.புதூர் காலனி பகுதிகளில் உப்பு தண்ணீர் குழாய்களை மாற்றி அமைப்பதும் எழில் நகர், ஆர்.பி.புதூர் மற்றும் விளையாட்டு மையாதனம் அருகில் பழுதடைந்த HDPE டேங்கினை மாற்றி அமைக்க வேண்டியதும் அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

__அலுவலக குறிப்பு:-__ மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 4985 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 535, அனுமதிக்கப்பட்டது.**

__**பொருள் எண். 19 :**__

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான சேந்தமங்கலம் சாலையில் இயங்கிவரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் OCEMS நிறுவும் பணி நடைபெற்றுவருகிறது. மேற்கண்ட பணியில் கழிவுநீர் உள் மற்றும் வெளிசெல்லும் பகுதிகளில் 400MM விட்டமுள்ள MS பைப் அமைக்கவேண்டியதும் அதற்கான உதிரிபாகங்கள் பொருத்த வேண்டியதும் அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

__அலுவலக குறிப்பு:-__ மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 498 /2023/இ1**

**தீர்மானம் எண் : 536, அனுமதிக்கப்பட்டது.**

__**பொருள் எண். 20 :**__

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38 கொண்டிசெட்டிப்பட்டி பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் (Type II) Lan நெட்வொர்க் அமைத்தல் மற்றும் UPS, Scanner, Speaker ஆகியவைகளை கொள்முதல் செய்தல் பணி ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 01.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. M/s.GSC Technology & Services, Komarapalayam – ரூ.6,49,241 /–
2. Perennial Systems, Salem – ரூ.6,67,666/–

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த M/s.GSC Technology & Services, Komarapalayam நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்பித்த M/s.GSC Technology & Services, Komarapalayam நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க. எண். 3982/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 537, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38 கொண்டிசெட்டிப்பட்டி பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு (Type II) 11 உயர்வகை கணினிகள் கொள்முதல் செய்தல் பணி ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 02.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. M/s.GSC Technology & Services, Komarapalayam – ரூ. 13,36,203 /–
2. Perennial Systems, Salem – ரூ. 14,03,006/–

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த M/s.GSC Technology & Services, Komarapalayam நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்பித்த M/s.GSC Technology & Services, Komarapalayam நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண். 3981/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 538, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2023–2024இன்கீழ் சாலை மேம்பாட்டு பணிகள் ரூ.300.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.36965/2022/எம்.ஏ1, நாள். 23.06.2023 வாயிலாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட சாலை மேம்பாட்டு பணிகள் 4சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1966/2023/பி1, நாள்.26.06.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் சிப்பம் 2இன்கீழ் வார்டு எண்.13,15,16,17,18 மற்றும் 23 தார்சாலை சாலை புதுப்பித்தல் பணி ரூ.72.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மண்டல செயற்பொறியாளர் (நகராட்சி நிர்வாகம்) சேலம் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி எண்.77/2023–2024, நாள்.30.06.2023 வாயிலாக தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 04.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. SS Construction நாமக்கல்.
2. Meha Construction, நாமக்கல்.

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டும் தொழில்நுட்ப ரீதியாக தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளாக உள்ளது என தொழில்நுட்பக்குழுவால் 18.07.2023அன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதப்புள்ளிகள் 20.07.2023அன்று திறக்கப்பட்டது.

1. SS Construction நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.15 % சதவீதம் குறைவு
2. Meha Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.20 % சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

1. மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த SS Construction, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று மேற்கண்ட பணிக்கு தகுதிவாய்ந்த குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்பித்த SS Construction, நாமக்கல் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண். 3838–2/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 539, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 23 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி **2023–2024**இன்கீழ் சாலை மேம்பாட்டு பணிகள் ரூ.**300.00**இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**36965/2022**/எம்.ஏ1, நாள். **23.06.2023** வாயிலாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட சாலை மேம்பாட்டு பணிகள் **4**சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**1966/2023**/பி1, நாள்.**26.06.2023** வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் சிப்பம் **4**இன்கீழ் வார்டு எண்.**32,35,36,31** மற்றும் **33** தார்சாலை சாலை புதுப்பித்தல் பணி ரூ.**67.00**இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மண்டல செயற்பொறியாளர் (நகராட்சி நிர்வாகம்) சேலம் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி எண்.**79/2023–2024**, நாள்.**30.06.2023** வாயிலாக தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு **04.08.2023** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. SS Construction நாமக்கல்.
2. Meha Construction, நாமக்கல்.

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டும் தொழில்நுட்ப ரீதியாக தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளாக உள்ளது என தொழில்நுட்பக்குழுவால் **18.07.2023**அன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதப்புள்ளிகள் **20.07.2023**அன்று திறக்கப்பட்டது.

1. SS Construction நாமக்கல் – மதிப்பீட்டிற்கு **0.15** % சதவீதம் குறைவு
2. Meha Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு **0.20** % சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

1. மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த SS Construction, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று மேற்கண்ட பணிக்கு தகுதிவாய்ந்த குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்பித்த SS Construction, நாமக்கல் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண். 3838–4/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 540, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 24 :</u>**

நாமக்கல் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (SBM) 2.O இன்கீழ் கொசவம்பட்டி ரோஜா நகர் பகுதியில் 5 TPD கொள்ளளவு கொண்ட பொருட்கள் மீட்பு கூடம் (MRF) அமைத்தல் பணி ரூ.**42.50**இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. தற்போது பணி முடிவுறும் நிலையில் உள்ளது. இக்கட்டிடத்தின் மேற்கூரை அருகில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உயர்அழுத்த மின் கம்பி செல்வதால் அபாத்தான நிலை உள்ளது. எனவே உயர்அழுத்த மின்கம்பியினை மாற்றி அமைக்க தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடம் கோரியதில் செலவினத்தொகையாக ரூ.**2.61**இலட்சம் செலுத்த கேட்பு பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்னனுமதிய பெற்று மேற்கண்ட தொகையை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண். 7750–1 /2022/இ1)**

**தீர்மானம் எண் : 541, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 25 :</u>**

நாமக்கல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN 28 AP 2237 (Compactor) எண்ணுள்ள வாகனத்தில் புதியதாக ஜாக்கி மாற்றுவதற்கும் மற்றும் பழுது பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.1,06,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 492, நாள்: 31.07.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 22.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. காந்தி மோட்டர்ஸ், ஈரோடு – ரூ. 1,04,950/–
2. மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், திருப்பூர் – ரூ. 1,05,850/–

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :–** மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த காந்தி மோட்டர்ஸ், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 4000/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 542, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 26 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட போதுப்பட்டி மற்றும் கொசவம்பட்டி பகுதிகளில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2021–2022இன்கீழ் அமைக்கப்பட்டுள்ள நகர் நலமையங்கள் 06.06.2023 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறக்கப்படவுள்ளது. விழா முன்னேற்பாடுகள் மேற்கொள்ளுதல் பணிக்கு 01.06.2023அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1. Varsha Group of Construction, நாமக்கல் – 39,500/-
2. திரு.கே.ஜி.சீனிவாசன், நாமக்கல் – 41,200/-
3. JP Construction, நாமக்கல் – 41,800/–

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி சமர்ப்பித்த Varsha Group of Construction, நாமக்கல் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u> :–

1. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்த Varsha Group of Construction, நாமக்கல் நிறுவனத்திற்கு பணியின் அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.3320 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 543, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 27 :</u>**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான மோகனூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நாமக்கல் பரமத்தி சாலை பிரதான தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிவரை அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் பணி ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 23.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. MPS Engineering construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.10 சதவீதம் குறைவு
2. திரு. ஸ்ரீதர்மூர்த்தி, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.12 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த MPS Engineering construction, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. குடிநீர் விநியோகப் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்பித்த MPS Engineering construction, நாமக்கல் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க. எண். 4354/2023/இ1)**

**தீர்மானம் எண் : 544, அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண். 28 :

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட அனைத்து நகராட்சி பள்ளிகளுக்கும் 2023–2024 ஆம் ஆண்டு சலுகை விலையில் தினகரன் நாளிதழ் விநியோகம் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் **ரூ.50,000/–** க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளவும் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.20/2023/பி3)**

**தீர்மானம் எண் : 545, அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 29 :

நாமக்கல் நகராட்சி அலுவலகம் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு ஏப்ரல் 2023 முதல் ஜுன் 2023 வரை தினத்தந்தி, தினகரன் மற்றும் காலைக்கதிர் செய்தித்தாள் விநியோகம் செய்தமைக்கு D.பெரியசாமி செய்தித்தாள் விற்பனையாளரிடமிருந்து தொகை ரூ.2,110/– பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ.2,110/–ஐ D.பெரியசாமி செய்தித்தாள் விற்பனையாளர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.20/2023/பி3)**

**தீர்மானம் எண் : 546, அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 30 :

நாமக்கல் நகராட்சி அலுவலக பொதுசுகாதார பிரிவில் பிறப்பு இறப்பு சான்று பதிவுகள் மேற்கொள்ள பயன்படுத்தப்படும் கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு 5வருடங்களுக்குமேல் ஆகிவிட்டதால் மேற்கண்ட கணினிகளில் அவ்வப்போது பழுதுகள் ஏற்பட்டு பணி வெகுவாக பாதிப்படைகிறது. எனவே பொதுசுகாதார பிரிவிற்கு 3புதிய கணினிகள், பிரிண்டர் ஒன்று மற்றும் அதற்கான உதிரி பாகங்கள் கொள்முதல் செய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணிக்கு தேவைப்படும் உத்தேச செலவினம் ரூ.5.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5243/2023/இ1)**

**தீர்மானம் எண் : 547, அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 31 :

நாமக்கல் நகராட்சியில் கலைஞர் நகர்புர மேம்பாட்டு திட்டம் 2021–2022இன்கீழ் திருச்செங்கோடு சாலையில் புதிய சந்தை வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியில் மின் விளக்குகள் பொருத்துதல், தேவையான இடங்களில் மின் இணைப்புகள் வழங்குதல் மற்றும் குடிநீர் விநியோகப்பணிகள் உள்ளிட்ட கூடுதல் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது. மேற்கண்டவாறு புதிய சந்தை வளாகத்தில் கூடுதல் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.24.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4873/2023/இ1)**

**தீர்மானம் எண் : 548, அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி.**